### கல்வி என்பது வெறும் பொருளீட்ட மட்டுமல்ல;

# சமூக மேம்பாட்டிற்காகவும் பயன்பட வேண்டும்!

## பட்டமளிப்பு விழாவில் கழக துணைப் பொதுச்செயலாளர் ஆ.இராசா எம்.பி. பேச்சு!



பெரம்பலூர்,ஆக,10

பெரம்பலூர் சீனிவாசன் கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் 18 ஆவது பட்டமளிப்பு விழா தனலட்சுமி சீனிவாசன் நிகர்நிலைப் பல்கலைக்கழக கூட்டரங்கில் நடைபெற்றது. இவ்விழாவிற்கு தனலட்சுமி சீனிவாசன் பல்கலைக்கழக வேந்தர் அ.சீனிவாசன் தலைமை வகித்தார்.

இந்த விழாவில் கழக துணைப் பொதுச்செயலாளர் முன்னாள் ஒன்றிய அமைச்சர், ஆ.இராசா.எம்.பி. கலந்து கொண்டு, பல்கலைக்கழக அளவில் தரவரிசைப் பட்டியலில் இடம் பெற்ற 40 மாணவர்கள் உட்பட 1007 மாணவர்களுக்கு பட்டங்களை வழங்கி சிறப்புரையாற்றினார்.

இந்த விழாவில் மாணவர்களிடையே ஆ.இராசா.எம்பி. பேசுகையில்,

"நாங்கள் படித்த காலத்தில் கல்லூரிகளில் இருந்த அடிப்படை வசதிக் குறைபாடுகளையும் தற்போதைய கல்வி வளர்ச்சியையும் அவர் ஒப்பிட்டுப் பேசினார். பட்டம் பெறுவது வாழ்க்கையின் முற்றுப்புள்ளியாக அல்லாமல், அது ஒரு தொடக்கப் புள்ளியாக அமைய வேண்டும் என மாணவர்களை அறிவுறுத்தினார். ஒரு படித்த மனிதனின் அறிவு அவனது சமூகத்திற்கு பயன்படாமல் சமூகத்திற்கு எதிராகத் திரும்புமானால், அவன் விலங்கை விட கொடியவன் என சட்டமேதை அம்பேத்கர் கூறியதை அவர் நினைவூட்டினார். மாணவர்களின் படிப்பு என்பது வெறும் ஏட்டுப் படிப்பாகவோ, பதவி பெறுவதற்காகவோ அல்லது பணம் சம்பாதிப்பதற்காகவோ மட்டுமே பயன்படும் என்ற நிலை இருந்தால், இந்தியாவில் மதச்சண்டைகளும் பிளவுகளும் தொடர்ந்து கொண்டேதான் இருக்கும். என்னுடைய பட்டமும், நான் பெற்ற அறிவும் இந்த சமூகத்தின் மேம்பாட்டிற்குப் பயன்படும்; சமூகத்தை ஒருங்கிணைக்க என்னாலான அனைத்து முயற்சிகளையும் நான் செய்வேன் என்ற உயரிய சிந்தனையோடு ஒரு பத்து பேர் முன்வந்தால் கூட, இந்தியா முழுமையான அமைதியை அடையும். இந்தியாவில் பல்வேறு மொழிகள், உடைகள், நாகரிகங்கள் மற்றும் மாறுபட்ட உணவுப் பழக்கவழக்கங்கள் என பன்முகத்தன்மை காணப்பட்டாலும், வேற்றுமைகளை மறந்து அனைவரையும் 'இந்தியர்' என ஒன்றிணைப்பது நமது அரசியலமைப்புச் சட்டமே ஆகும். எனவே, சட்டம் படிக்காதவர்கள் கூட இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை அவசியம் படித்து தெரிந்துகொள்ள வேண்டும் என அவர் வலியுறுத்தினார். உலக மொழிகளில் தமிழ் மொழி மிக உயர்ந்த கடமையைக் கொண்டுள்ளது என பெருமிதம் தெரிவித்தார். சார்லஸ் டார்வின், நியூட்டன் மற்றும் புருனோ போன்ற அறிஞர்கள் உலகத்தின் பரிணாமம் மற்றும் கோள்களின் இயக்கம் குறித்த அறிவியல் உண்மைகளை எடுத்துரைப்பதற்கு பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே, தொல்காப்பியம் மற்றும் திருக்குறள் உள்ளிட்ட தமிழ் இலக்கியங்கள் அவற்றை தெளிவாக விளக்கியுள்ளன என்பதை அவர் சுட்டிக் காட்டினார்.பேரறிஞர் அண்ணா தன்னை 'திராவிடன்' என நாடாளுமன்றத்தில் முழங்கியது வேறு எந்த மாநிலத்தவருக்கும் எதிரானது அல்ல; அது தமிழர்களின் தனித்துவமான மொழி, நாகரிகம் மற்றும் பண்பாட்டை உலகிற்கு பறைசாற்றும் பெருமையாகும் என அவர் விளக்கினார். மேலும், ஜனநாயகத்திற்கு எதிரான சாதி, அறிவியலுக்கு எதிரான மூடநம்பிக்கை மற்றும் சுதந்திரத்திற்கு எதிரான அடக்குமுறை ஆகிய மூன்றையும் எதிர்த்து மாணவர்கள் போராட வேண்டும் என்ற அண்ணாவின் பட்டமளிப்பு விழா உரையையும் அவர் மேற்கோள் காட்டினார். பாரதிதாசன் கவிதைகளை மேற்கோள் காட்டிப் பேசிய அவர், மூட நம்பிக்கைகளைத் தவிர்த்து, உழைக்கும் வர்க்கத்தினரின் உரிமைகளுக்காகவும் மனித நேயத்திற்காகவும் மாணவர்கள் குரல்கொடுக்க வேண்டும் என கேட்டுக் கொண்டார். இறுதியாக, மகாகவி ரவீந்திரநாத் தாகூரின் புகழ்பெற்ற 'கீதாஞ்சலி' கவிதை வரிகளைத் தமிழில் மொழிபெயர்த்துக் கூறி, அச்சமற்ற மற்றும் குறுகிய பிளவுகள் இல்லாத உலகத்தை மாணவர்கள் உருவாக்க வேண்டும் என வாழ்த்தி தனது உரையை நிறைவு செய்தார்.

இவ்விழாவில் தனலட்சுமி சீனிவாசன் கல்வி நிறுவனங்களின் செயலாளர் நீலராஜ், இயக்குனர் ராஜபூபதி, சிறப்பு அழைப்பாளர் புதுகோட்டை பி.கே.எஸ் கல்வி நிறுவனங்களின் தாளாளர் கருப்பையா, தனலட்சுமி சீனிவாசன் கல்வி நிறுவனங்களின் திட்டமிடல் மற்றும் மேம்பாட்டு அதிகாரி நந்தகுமார், சீனிவாசன் கலை மற்றும் அறிவியல் கல்லூரி முதல்வர், தனலட்சுமி சீனிவாசன் நிகர்நிலைப் பல்கலைக்கழக பதிவாளர் இளங்கோவன், துறைத் தலைவர்கள், பெற்றோர்கள் மற்றும் மாணவமாணவியர் என 2500 க்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர்.

---

### தினந்தோறும் பல ஆயிரம் பக்தர்கள் வருகை தரும்

# திருவண்ணாமலை நகரத்திற்கு தேவையான இரயில்கள் இயக்கப்பட வேண்டும்!

## ஒன்றிய இரயில்வே அமைச்சரிடம் சி.என்.அண்ணாதுரை எம்.பி. கோரிக்கை!



புதுடெல்லி, ஆக. 10-

06.08.2026 அன்று இரயில்வே அமைச்சரை சந்தித்த திருவண்ணாமலை நாடாளுமன்ற உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை தினமும் பல ஆயிரம் பக்தர்கள் மற்றும் மக்கள் ஆன்மீகம் மற்றும் பல காரணங்களுக்காக உலகப்புகழ் பெற்ற அண்ணாமலையார் திருத்தல நகருக்கு வருகிறார்கள் என்றும், ஆனால் திருவண்ணாமலை நகரத்திற்கு தேவையான இரயில்கள் இயக்கப்படவில்லை என்பதை எடுத்துத்துரைத்து கீழ்க்கண்ட கோரிக்கைகளை வைத்தார்.

1.18ஆண்டுகளாக நிலுவையில் உள்ள திண்டிவனம் திருவண்ணாமலை புதிய ரயில் பாதை திட்டத்திற்கு நிலம் எடுக்க தேவையான நிதியை ஒதுக்கி உடனடியாக விடுவிக்க கோரிக்கை.

புதிய ரயில் மற்றும் நீட்டிப்பு கோரிக்கைகள்:

1.திருவண்ணாமலையின் 18 ஆண்டுகால நீண்டநாள் கோரிக்கையான சென்னை. திருவண்ணாமலை "தீபம் இன்டர்சிட்டி எக்ஸ்பிரஸ் (அல்லது) மெமு (MEMU) எக்ஸ்பிரஸ்" ரயிலை தாம்பரம்,திண்டிவனம், விழுப்புரம் மற்றும் திருக்கோவிலூர் வழியாக அறிமுகப்படுத்தக் கோரிக்கை. (2007 ஆம் ஆண்டு அகலப் பாதை மாற்றம் பணிகளின் போது திருவண்ணாமலைதாம்பரம் பாசஞ்சர் ரயில் நிறுத்தப்பட்ட பிறகு). இந்த ரயில் மீண்டும் இயக்கப்பட்டால் இது தினசரி ஆயிரக்கணக்கான பயணிகள், பக்தர்கள், மாணவர்கள், நோயாளிகள் மற்றும் வியாபாரிகளுக்கு பயனளிக்கும்.

2. ராமேஸ்வரத்தில் இருந்து ஸ்ரீ மாதா வைஷ்ணோ தேவி கத்ராவிற்கு புதிய வார இருமுறை சேவைகளும், ராமேஸ்வரத்தில் இருந்து ஹரித்வாருக்கு வாராந்திர சேவைகளையும் தஞ்சாவூர், கும்பகோணம், சிதம்பரம், திருவண்ணாமலை, வேலூர், புது டெல்லி வழியாக இயக்கக் கோரிக்கை. இதன் மூலம் தேசிய தலைநகரான புது டெல்லிக்கும், வடக்கே உள்ள முக்கிய ஆன்மீகத் தலங்களான SMVD கத்ரா & ஹரித்வாருக்கும் தமிழ்நாட்டின் முக்கிய ஆன்மீகத் தலங்களுடன் முதன்முறையாக நேரடி இணைப்பு ஏற்படும். இது ஆன்மீக சுற்றுலா, வர்த்தகம் மற்றும் உள்ளூர் பொருளாதாரத்தை மேம்படுத்தும்.

3. புதுச்சேரியில் இருந்து திருவண்ணாமலைக்கு புதிய பாசஞ்சர் மெமு (MEMU) ரயில் (அல்லது) 66064/65 புதுச்சேரி விழுப்புரம் மெமு ரயிலை திருவண்ணாமலை வரை நீட்டித்தல்: இரு நகரங்களும் 10 கி.மீ தொலைவிற்குள் அமைந்துள்ள முக்கிய சுற்றுலா மற்றும் ஆன்மீக மையங்களாக இருந்தாலும், புதுச்சேரி மற்றும் திருவண்ணாமலையை இணைக்கும் நேரடி தினசரி ரயில் சேவைகள் எதுவும் இல்லை. எனவே, இந்த மெமு ரயில் உள்ளூர் மக்கள், மாணவர்கள், உள்நாட்டு மற்றும் சர்வதேச சுற்றுலாப் பயணிகள் மற்றும் நோயாளிகளுக்கு முதன்முறையாக தினசரி இணைப்பை வழங்கும்.

4.திருவண்ணாமலையிலிருந்து பெங்களூருவுக்கு தினசரி இரவு நேர எக்ஸ்பிரஸ் ரயிலையும், புதுச்சேரி மற்றும் பெங்களூரு இடையே திருவண்ணாமலை வழியாக வந்தே பாரத் எக்ஸ்பிரஸ் ரயிலையும் அறிமுகப்படுத்தக் கோரிக்கை.

5.16848/47 செங்கோட்டைமயிலாடுதுறை எக்ஸ்பிரஸை சிதம்பரம், கடலூர்,விழுப்புரம் வழியாக திருவண்ணாமலை வரை நீட்டித்தல்(டெல்டா மற்றும் முக்கிய கோவில் நகரங்களை (கும்பகோணம், தஞ்சாவூர்) தினசரி இணைக்கும் வகையில்).

6.கோயம்புத்தூர் மற்றும் திருவண்ணாமலை இடையே புதிய தினசரி இரவு நேர எக்ஸ்பிரஸ் ரயில் (அல்லது) 16324/23 மங்களூரு கோயம்புத்தூர் எக்ஸ்பிரஸை திருப்பூர், ஈரோடு, சேலம், ஜோலார்பேட்டை மற்றும் காட்பாடி வழியாக திருவண்ணாமலை வரை நீட்டித்தல்.

7.முக்கிய சிவத்தலங்களுக்கு இடையே முதன்முறையாக இணைப்பை ஏற்படுத்த, ஆன்மீக சுற்றுலா மற்றும் பொருளாதாரத்தை மேம்படுத்தும் வகையில், மதுரையிலிருந்து அயோத்தி கண்ட் (Ayodhya cant) வரை திருவண்ணாமலை, விஜயவாடா, வாரங்கல், வாரணாசி வழியாக புதிய சிறப்பு ரயில் இயக்கக் கோரிக்கை.

---

### விண்வெளித் துறையில் செயல்படுத்தப்பட்டு வரும்

# நீலப் பறவை செயற்கை கோள் திட்டம் வெற்றிகரமான முன்னேற்றத்தை ஏற்படுத்தியுள்ளதா?

## மாநிலங்களவையில் எஸ்.ஆர்.சிவலிங்கம் கேள்வி!



புதுடெல்லி, ஆக. 10-

திராவிட முன்னேற்ற கழக மேலவை உறுப்பினர் எஸ். ஆர். சிவலிங்கம் மாநிலங்களவையில் 6 ஆகஸ்ட் 2026 அன்று விண்வெளித் துறையில் செயல் படுத்தப்பட்டு வரும் நீலப் பறவை செயற்கை கோள் திட்டம் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் அடைந்துள்ளதா? என்றும் சர்வதேச விண்வெளி ஆராய்ச்சி நிறுவனங்களுடன் ஒன்றிய அரசின் ஒத்துழைப்பை பெருக்கிட ஏதேனும் திட்டங்கள் உள்ளதா? தனியார் பங்களிப்பை விண்வெளித் துறையில் அதிகரிக்கும் செயல் வடிவம் அரசிடம் உள்ளதா? என்றும் ஒன்றிய அரசின் விண்வெளி ஆராய்ச்சித்துறை இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் அவர்களிடம் விரிவான கேள்வியை எழுப்பினார்.

அமெரிக்க விண்வெளித் துறையின் ஒத்துழைப்போடு LVMJ செயற்கை கோள் திட்டத்தின் படி 6100 கிலோ எடையுள்ள செயற்கைக் கோளில் 520 கிலோ மீட்டர் உயரத்தில், இந்தியாவிலிருந்து ஏவப்பட்டன என்றும், செயற்கை; கோள் செலுத்தும் தொழில் நுட்பத்தில் இந்தியா முக்கியமான இடத்தைப் பெற்றுள்ளது என்றும், வருகின்ற 2047ஆம் ஆண்டிற்குள் சர்வதேச விண்வெளி ஒத்துழைப்பில் இந்தியாவின் விண்வெளித் துறை முக்கியமான மைல் கல்லை எட்டிப்பிடிப்பதற்கான அனைத்து முயற்சிகளையும் ஒன்றிய அரசு எடுத்து வருகிறது என்றும், மனிதர்களை விண்வெளிக்கு அனுப்புவது, விண்வெளியில் ஆராய்ச்சி மையம் ஏற்படுத்துவது போன்ற அனைத்து துறைகளிலும் மற்ற நாடுகளுடன் இணைந்து இந்தியா செயல்படும் என்று இணையமைச்சர் மாநிலங்களவையில் தெரிவித்தார்.

தமிழ்நாட்டின் குலசேகரப்பட்டினத்தில் இரண்டாவது ஏவுத்தளம் அமைத்து விண்வெளி கட்டமைப்புகளை வலுப்படுத்துதல், இந்திய தரக் கட்டுப்பாட்டுநிறுவனத்துடன் இணைந்து இந்திய விண்வெளி தரக் கட்டுபாட்டுகளை ஏற்படுத்துதல், ஸ்கைரூட், அக்னிகூல், இந்துஸ்தான் ஏரோநாட்டிக்ஸ் போன்றநிறுவனங்களுடன் இணைந்து செயல்படுதல், வெளிநாட்டு நேரடி முதலீட்டை விண்வெளித் துறையில் அதிகரித்தல், 1000 கோடி ரூபாய்க்கான விண்வெளி நிதியம் ஒன்றை ஏற்படுத்துல் 2047ஆம் ஆண்டிற்குள் செயல்படுத்த அனைத்து முயற்சிகளையும் ஒன்றிய அரசு எடுத்து வருகிறது என்று ஒன்றிய அரசின் விண்வெளி ஆராய்ச்சித் துறை இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் அவர்கள், மாநிலங்களவையில் திராவிட முன்னேற்ற கழக மேலவை உறுப்பினர் எஸ். ஆர். சிவலிங்கம் அவர்கள் எழுப்பிய கேள்விக்கு விரிவான பதிலை அளித்துள்ளார்.

---

### இலங்கைக் கடற்படையினரால்

# தமிழக மீனவர்கள் எத்தனை பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்?

## மக்களவையில் அருண் நேரு கேள்வி!



புதுடெல்லி, ஆக.10-

இலங்கை கடற்படையால் கைது செய்யப்படும் தமிழக மீனவர்கள் பிரச்சனை குறித்து பெரம்பலூர் எம்.பி அருண் நேரு அவர்கள் பாராளுமன்றத்தில் கவன ஈர்ப்பு கேள்வி எழுப்பினார்.

கடந்த 5 ஆண்டுகள் மற்றும் நடப்பு ஆண்டில் இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்ட, தாக்கப்பட்ட மீனவர்கள் விவரம், பறிமுதல் செய்யப்பட்ட படகுகள், இலங்கை வசம் உள்ள மீனவர்கள் மற்றும் படகுகளின் எண்ணிக்கை குறித்து அவர் கேள்வி எழுப்பினார்.

இதற்கு பதிலளித்த வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர். ஜெய்சங்கர், கடந்த 5 ஆண்டுகளில் 1554 தமிழக மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகவும், 215 படகுகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். 2026ம் ஆண்டு ஜூலை 31 வரை 119 மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தற்போது 27 தமிழக மீனவர்களும், 249 மீனவ படகுகளும் இலங்கை வசம் உள்ளதாகவும் அமைச்சர் கூறினார். மீனவர்கள் நலன் மற்றும் பாதுகாப்பிற்கு அரசு முக்கியத்துவம் அளிப்பதாகவும், இலங்கை அரசுடன் இருதரப்பு பேச்சுவார்த்தை மூலம்உடனடி விடுதலைக்கு முயற்சி எடுக்கப்படுவதாகவும் தெரிவித்தார்.

கடந்த 3 நிதியாண்டுகளில் சட்ட உதவி மற்றும் மீட்பு பணிகளுக்காக 1.84 கோடி நிதி உதவி வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

---

### சிறைகளுக்குள்ளேயே தினசரி நீதித்துறை அணுகலை வழங்குவதற்கான

# நாடு தழுவிய வழிமுறையையும் உச்ச நீதிமன்றம் முன்மொழிந்துள்ளதா?

## மக்களவையில் கோவை – முனைவர் கணபதி ப.ராஜ்குமார் கேள்வி!



புதுடெல்லி,ஆக.10-

நீதிமன்றங்களில் ஆஜர் படுத்தப்படாத நிலையில், விசாரணைக்கு உட்பட்ட கைதிகள் அரசியலமைப்பு ரீதியான பாதுகாப்புகளை இழக்காமல் இருப்பதை உறுதிசெய்யும் வகையில், நீதிமன்றத்தால் நியமிக்கப்பட்ட நீதிபதிகள் தினமும் சிறைகளைச் சென்று பார்வையிடுவதற்கான ஒரு கொள்கையையும், சிறைகளுக்குள்ளேயே தினசரி நீதித்துறை அணுகலை வழங்குவதற்கான நாடு தழுவிய வழிமுறையையும் உச்ச நீதிமன்றம் முன்மொழிந்துள்ளதா?, அவ்வாறாயின், அது குறித்த விவரங்கள் என்ன என்று கோவை நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் கணபதி ப.ராஜ்குமார் கேள்வி எழுப்பினார்.

இதற்கு சட்டம் மற்றும் நீதி அமைச்சகத்தின் இணை அமைச்சர் (தனிப் பொறுப்பு), நாடாளுமன்ற விவகாரங்கள் அமைச்சகத்தின் இணை அமைச்சர் அர்ஜுன் ராம் மேக்வால் அளித்த பதில் வருமாறு :

சட்ட சேவைகள் அதிகார அமைப்புகள் சட்டம், 1987' இன் கீழ் அமைக்கப்பட்ட தேசிய சட்ட சேவைகள் ஆணையம் (NALSA) இதன் தலைமைப் புரவலராக இந்தியத் தலைமை நீதிபதி உள்ளார் நாடு முழுவதும் உள்ள விசாரணைக்கு உட்பட்ட கைதிகள் (undertrial prisoners) மற்றும் பிற சிறைவாசிகளுக்கு இலவச மற்றும் திறமையான சட்ட சேவைகளை வழங்கி வருகிறது. 'சட்ட சேவை மையங்கள்' மற்றும் 'சிறை சட்ட உதவி மையங்கள்' (PLACs) மூலமாக விசாரணைக்கு உட்பட்ட கைதிகளுக்கு இலவச சட்ட சேவைகள் அல்லது உதவிகளை வழங்குவதற்கு NALSA பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளது. மாவட்ட சட்ட சேவைகள் ஆணையத்தின் (DLSA) செயலாளர் மற்றும் அதன் தலைவர் (மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி) ஆகியோர், NALSAவின் நிலையான செயல்பாட்டு நடைமுறைகளின்படி அவ்வப்போது சிறை ஆய்வுகளை மேற்கொள்கின்றனர். கைதிகளுக்கான சட்ட உதவி சேவைகளை அணுகுவதற்கான நடைமுறை மற்றும் சிறைச்சாலை சட்ட உதவி கிளினிக்குகளின் செயல்பாடு, 2022 (SOP 2022), திறம்பட சட்ட உதவி வழங்குதல் மற்றும் கைதிகளின் நிறுவன மேற்பார்வை ஆகியவற்றை உறுதிசெய்யும். SOP ஆல் கட்டளையிடப்பட்டபடி, செயலாளர், DLSA ஒவ்வொரு PLAC க்கும் குறைந்தபட்சம் ஒவ்வொரு மாதமும் சென்று ஆய்வு செய்து, தகுதியான அனைத்து விசாரணைக் கைதிகளுக்கும் சட்டப்பூர்வ பிரதிநிதித்துவம் வழங்கப்படுவதை உறுதி செய்கிறார், சிறைச்சாலை நிலைமைகளைக் கண்காணிக்கிறார், அல்லாத நிகழ்வுகளை மதிப்பாய்வு செய்கிறார். நீதிமன்றங்களில் கைதிகளை ஆஜர்படுத்துதல் மற்றும் இதில் ஏற்படும் குறைபாடுகளைச் சரிசெய்ய உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் ஆகியவை இதில் அடங்கும். போக்குவரத்து அல்லது பிற தடைகள் காரணமாக, விசாரணைக்கு உட்பட்ட கைதிகள் (undertrial prisoners) நேரிலோ அல்லது காணொளி வாயிலாகவோ நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படாத நிகழ்வுகளை ஆய்வு செய்யவும், அதற்கான தகுந்த தீர்வு நடவடிக்கைகளைப் பரிந்துரைக்கவும் மாவட்ட அளவில் 'விசாரணைக்கு உட்பட்ட கைதிகள் மறுஆய்வுக் குழுக்கள்' (UTRCs) அமைக்கப்பட்டுள்ளன என்று கூறினார்.

---

### தர்மபுரி மாவட்டத்தில்

# எல்.பி.ஜி. விநியோக கட்டமைப்பை வலுப்படுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

## மக்களவையில் ஆ.மணி கேள்வி!



புதுடெல்லி, ஆக. 10-

தமிழ்நாட்டில்,குறிப்பாகதர்மபுரிநாடாளுமன்ற தொகுதியில், அனைத்து குடும்பங்களுக்கும் வீட்டு உபயோகசமையல்எரிவாயு (எல்பிஜி) உருளைகளை தாமதமின்றிஎளிதாகவழங்குவதற்காக விநியோக கட்டமைப்பை வலுப்படுத்த ஒன்றிய அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் என்ன? என்று தருமபுரி தொகுதி உறுப்பினர் ஆ. மணி கேள்வி எழுப்பினார்.

அதை தொடர்ந்து மேலும் அவர் தர்மபுரி நாடாளுமன்ற தொகுதியில், வீட்டு உபயோக எல்பிஜி எரிவாயு அனைத்து குடும்பங்க ளுக்கும் தாமதமின்றி எளிதில் கிடைப்பதை உறுதி செய்ய விநியோக கட்டமைப்பை வலுப்படுத்த ஒன்றிய அரசு நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளதா?அவ்வாறு மேற்கொள்ளப்பட்டிருந்தால், அதன் விவரங்கள் என்ன?

தர்மபுரி நாடாளுமன்ற தொகுதியில் தற்போது செயல்பட்டு வரும் எல்பிஜி விநியோகஸ்தர்கள், விநியோக மையங்கள் மற்றும் எல்பிஜி நுகர்வோரின் எண்ணிக்கை எவ்வளவு? கடந்த 3 ஆண்டுகளில் விநியோக கட்டமைப்பை விரிவுபடுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன?

தர்மபுரி தொகுதியின் கிராமப்புறமற்றும்தொலைதூர பகுதிகளில் எல்பிஜி சிலிண்டர் விநியோகத்தை மேம்படுத்தகூடுதல்எல்பிஜி விநியோகஸ்தர்களை நியமிக்கவோஅல்லதுவிநியோகத் தளவாடங்களை வலுப்படுத்தவோ ஒன்றிய அரசு திட்டமிட்டுள்ளதா? அவ்வாறுஇருந்தால்,அதன்விவரங்கள் என்ன?

தமிழகத்தில், குறிப்பாக தர்மபுரி நாடாளுமன்ற தொகுதியில், எல்பிஜி நுகர்வோர் பாதுகாப்பு, ஆன்லைன்/டிஜிட்டல் முன்பதிவு, வீடுகளுக்கே நேரடியாக சிலிண்டர் விநியோகம்மற்றும்உரியகாலத்திற்குள்மறுநிரப்பல்சிலிண்டர் கிடைப்பதை உறுதி செய்வதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ளநடவடிக்கைகள்என்ன?மேலும்,எல்பிஜி சேவையின் அணுகல் மற்றும் தரத்தை மேம்படுத்த எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் என்ன? என்று

மத்திய பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சகத்தின் இணை அமைச்சர் சுரேஷ் கோபியிடம்ஆ.மணிஎம்.பி.கேள்வி எழுப்பி உள்ளார்.



கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம் – தோவாளை கிழக்கு ஒன்றியம், திருப்பதிசாரம் ஊராட்சி தி.மு.க. நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டத்தில் கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர் வழக்கறிஞர் ரெ.மகேஷ் கலந்து கொண்டு ஆலோசனைகள் வழங்கினார்!